**வாக்குமூலம்**
**சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம்.**
**O.S.No.156/2024**
**வழக்கு சாட்சி PW.1**
**1873ம் ஆண்டின் 10வது விதியின்படி திரு.கே.சிலம்பரசன் அவர்களால் திறந்த நீதிமன்றத்தில் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : வேலுச்சாமி | தொழில் | : விவசாயம் |
| தகப்பனார் பெயர் | : மாரியப்பகவுண்டர் | கணவர் பெயர் | : --- |
| கிராமம் | : வலையபட்டி | வயது | : சுமார் 63 |
| தாலுக்கா | : ஒட்டன்சத்திரம் | நாள் | : 13.10.2025 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | | |

<u>1 முதல் 6 பிரதிவாதிகள் தரப்பில் மேற்கொள்ளப்படும் குறுக்கு விசாரணை :</u>

தாவா வழக்கு எதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் ? பாகப்பிரிவினைக்காக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தாவா சொத்துக்களை பொறுத்து என்னுடைய முன்னோர்களுக்கிடையே கடந்த 1968-ம் ஆண்டு வாக்கில் சொத்துக்களை பொறுத்து பெரியவர்களை வைத்து பேசி ஒரு பஞ்சாயத்து முசலிக்கா ஏற்படுத்திக் கொண்டார்கள் என்றால் ? சரிதான். அந்த பஞ்சாயத்து முசலிக்கா படி A அட்டவணை சொத்துக்கள் எனது தகப்பனாரான மாரியப்பகவுண்டரும் மற்றும் அவரது சகோதரர்களுக்கு ஒதுக்கப்பட்ட சொத்து என்றால் ? சரிதான். B அட்டவணை சொத்துக்கள் பழனியப்பகவுண்டர் பாகத்திற்கு ஒதுக்கப்பட்ட சொத்துக்கள் என்றால் ? சரிதான். C அட்டவணை சொத்துக்கள் குப்பணகவுண்டர் பாகத்திற்கு ஒதுக்கப்பட்ட சொத்துக்கள் என்றால்? சரிதான். D அட்டவணை சொத்துக்கள் காளியப்பகவுண்டருக்கு ஒதுக்கப்பட்ட சொத்துக்கள் என்றால் ? சரிதான். பஞ்சாயத்து முசலிக்காவின் அடிப்படையில் வருவாய்துறையினர் உட்பிரிவு செய்துள்ளார்கள் என்றால் ? இல்லை. நில உடமை மேம்பாட்டு திட்டத்தின் கீழ் சொத்துக்களை பொறுத்து உட்பிரிவு ஏற்பட்டுள்ளது. எனது தகப்பனாரின் தகப்பனார் பெயர்

பொங்காளியப்பகவுண்டர் என்றால் ? ஆமாம். பொங்காளியப்பகவுண்டரின் உடன்பிறந்தவர்கள் பெயர்கள் கருப்பணகவுண்டர், குப்பணகவுண்டர், காளியப்பகவுண்டர் என்றால் ? சரிதான். பொங்காளியப்பகவுண்டருக்கு எத்தனை மகன்கள் என்றால் ? 3 மகன்கள். பொங்காளியப்பகவுண்டரின் மகன் எனது தகப்பனார் மாரியப்பகவுண்டர் என்றால் ? ஆமாம். பொங்காளியப்பகவுண்டரின் மற்றொரு மகன் பெயர் குப்பணகவுண்டர் என்றால் ? சரிதான். பொங்காளியப்பகவுண்டரின் மற்றொரு மகன் பெயர் ஆறுமுகம் என்கிற ஆரப்பகவுண்டர் என்றால் ? சரிதான். ஆறுமுகம் என்ற ஆரப்பகவுண்டருக்கு ஒரே மகள் சாமியாத்தாள் என்றால் ? சரிதான். குப்பணகவுண்டருக்கு பழனிச்சாமி, பொங்கியம்மாள் என்பவர்கள் வாரிசுகள் என்றால் ? ஆமாம். மாரியப்பகவுண்டருக்கு நான் ஒரு மகன் என்றால் ? சரிதான். என்னுடன் பிறந்தவர்கள் 4 சகோதரிகள் உள்ளார்கள். சகோதரிகளின் பெயர்கள் குழந்தையம்மாள், காளியம்மாள், பொங்கியம்மாள், வள்ளியம்மாள் ஆகும். கருப்பணகவுண்டர் என்பவருக்கு பழனியப்பன் என்ற மகனும், இரண்டு பெண்களும் வாரிசுகள். பழனியப்பன் என்பவரின் சகோதரிகள் இருவர் பெயரும் எனக்கு தெரியவில்லை. பழனியப்பன் என்பவருக்கு இரண்டு மகன்கள், ஒரு மகள் உள்ளார். பொன்னுச்சாமி, சாமிநாதன் மற்றும் ருக்குமணி. குப்பணகவுண்டரின் மகள் பெயர் ராமாயம்மாள் என்றால் ? சரிதான். காளியப்பகவுண்டருக்கு மூன்று ஆண் மக்கள் என்றால் ? சரிதான். ஒரு பெண் மகளும் உள்ளார். இந்த வழக்கிற்கு வழக்குரை சங்கதிகள் யார் சொன்னதன்பேரில் தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் ? நான் சொன்னதன் பேரில் தான் வழக்கு தயார் செய்யப்பட்டது. தாவா சொத்துக்கள் சம்மந்தமாக எனது முன்னோர்கள் கடந்த 1968-ம் ஆண்டு பாகம் பிரித்து கொண்டுள்ள நிலையில் அந்த விபரங்கள் எதையும் இவ்வழக்கில் சொல்லவில்லை என்றால் ? சொல்லவில்லை. ஆவணம் பதிவு செய்யாமல் இருப்பதால் சொல்ல வேண்டாம் என்று சொல்லிவிட்டார்கள். நான் தாக்கல் செய்துள்ள வழக்கிற்கு பிரதிவாதிகள்

தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் ? சரிதான். அதை படித்து தெரிந்து கொண்டேனா என்றால் ? ஆமாம். பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரை சங்கதிகளில் சொத்துக்களை கடந்த 1968–ம் ஆண்டு பாகப்பிரிவினை செய்து கொண்டார்கள் என்று கூறியுள்ளார்கள் என்றால் ? சரிதான். 1968–ம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட பஞ்சாயத்து முசலிக்காவின் படி தான் ஒவ்வொருவருக்கும் பாகம் பிரித்து சொத்துக்களை ஒதுக்கியுள்ளார்கள் என்றால் ? ஆமாம். பிரதிவாதியை அணுகி பாகப்பிரிவினை செய்து சொத்துக்களை பிரித்து கொடுக்கும்படி எந்தவொரு ஆதரவையும் இவ்வழக்கில் முன்னிலைப்படுத்தவில்லை என்றால் ? ஆமாம், சரிதான். இந்த வழக்கை தாக்கல் செய்வதற்கு முன்பாக வழக்குரைஞர் அறிவிப்பு எதுவும் தரப்பினர்களுக்கு அனுப்பவில்லை என்றால் ? சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வழக்குரை சங்கதிகளில் வழக்கு சொத்துக்களை அமைதியான முறையில் சுவாதீனம் வைத்து அனுபவித்து வருவதை பிரதிவாதிகள் எவ்வித தடையும், இடையூறும் செய்யக்கூடாது என்று நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியுள்ளேன் என்றால் ? சரிதான். எனக்கு பாகம் இருப்பதாக விளம்புகை செய்ய வேண்டும் என்று தான் வழக்குரை சங்கதிகளில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் ? ஆமாம். நான் தாக்கல் செய்துள்ள வழக்குரை பரிகாரத்தில் விளம்புகை பரிகாரத்திற்கும், நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரத்திற்கும் நீதிமன்ற கட்டணம் கட்டாமல் அதற்கு முரண்பட்டு பாகப்பிரிவினை பரிகாரம் கோரி அதற்கான நீதிமன்ற கட்டணம் செலுத்தியுள்ளேன் என்றால் ? ஆமாம். எனவே நான் தாக்கல் செய்துள்ள வழக்குரை சங்கதிகளை முன்னுக்கு பின் முரணமாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் ? சரியல்ல. கடந்த 1968–ம் ஆண்டு பஞ்சாயத்து முசலிக்காவின் தன்மை படி சொத்துக்களை பிரித்து அனுபவித்து வந்ததில் குப்பணகவுண்டர் மகன் பழனிச்சாமி என்பவர் ஆரப்பகவுண்டரிடமிருந்து கடந்த 1993ம் ஆண்டு கிரையம் பெற்றுக் கொண்டார் என்றால் ? ஆமாம். கிரையம்

வாங்கிய பிறகு குப்பணகவுண்டர் மகன் பழனிச்சாமி, வாதியாகிய நான், மற்றும் 5–ம் பிரதிவாதி குப்பணகவுண்டர் கடந்த 22.12.2000ம் தேதியில் பாகப்பிரிவினை செய்து கொண்டார்கள் என்றால் ? ஆமாம்.

(தொடர்ச்சியான குறுக்கு விசாரணைக்காக வழக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.)

C JAYAPPRAKASH

Digitally signed by C JAYAPPRAKASH Date: 2025.10.13 15:02:27 +0530

சார்பு நீதிபதி

ஒட்டன்சத்திரம்